PSC/DIS/01/08/2020-03-09

2025.07.

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
அனைத்து மாகாணங்களினதும் பிரதம செயலாளர்கள்
அனைத்துத் திணைக்களங்களினதும் தலைவர்கள்
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்
பகிரங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழு
பகிரங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைக்குழு

**ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் அல்லது இலஞ்சச் சட்டத்தின் கீழான குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட அல்லது வழக்கு தொடரப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஆரம்பப் புலனாய்வுகள் மற்றும் முறைமைசார் ஒழுக்காற்று விசாரணைகளுக்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களை சாட்சியமளிப்பதற்காக அழைத்தல்**

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழான குற்றங்கள் தொடர்பில் அல்லது இலஞ்சச் சட்டத்தின் கீழான குற்றங்கள் தொடர்பில் வழக்கு தொடரப்பட்டு கைது செய்யப்பட்டு அல்லது வழக்கு தொடரப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஆரம்பப் புலனாய்வுகள் மற்றும் முறைமைசார் ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்கையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் புலனாய்வு உத்தியோகத்தர்களை சாட்சியாளர்களாக முன்னிலைப்படுத்தாமையின் காரணமாக குறித்த ஆரம்பப் புலனாய்வுகள் மற்றும் முறைமைசார் ஒழுக்காற்று விசாரணைகளை முடிவுறுத்த முடியாமற் போகின்றமை குறித்து பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, 2025 மே 20 ஆம் திகதி நடாத்தப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் மாதாந்த கூட்டத்தின் போது பின்வரும் தீர்மானங்களை எடுத்துள்ளது என, குறித்த ஆணைக்குழுவின் DG/RS/165/2025 ஆம் இலக்க மற்றும் 2025.06.12 ஆம் திகதிய கடிதம் மூலம் எனக்கு அறிவித்துள்ளது.

I. ஏற்புடைய உத்தியோகத்தருக்கு எதிராக நீதிமன்றில் தொடரப்பட்டுள்ள வழக்கு நடவடிக்கைகள் முடிவுறுதல் அல்லது குறித்த நீதிமன்றில் மேற்கொள்ளப்படும் வழக்கு விசாரணையின் போது ஏற்புடைய புலனாய்வு உத்தியோகத்தர்கள் சாட்சியமளித்துள்ளனரா என்பது குறித்து கவனம் செலுத்தாது ஆரம்பப் புலனாய்வுகள் மற்றும் முறைமைசார் ஒழுக்காற்று விசாரணைகளுக்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களை பங்குபற்றச் செய்தல்.

II. எவ்வாறாயினும், ஏற்புடைய புலனாய்வு உத்தியோகத்தர்கள் நீதிமன்றில் மேற்கொள்ளப்படும் வழக்கு விசாரணையின் போது சாட்சியமளிப்பதற்கு முன்னர் அல்லது குறித்த வழக்கு விசாரணை முடிவுறுவதற்கு முன்னர் புலனாய்வு உத்தியோகத்தர்களை ஆரம்பப் புலனாய்விற்கு அல்லது முறைமைசார் ஒழுக்காற்று விசாரணைக்கு முன்னிலைப்படுத்துவதன் மூலம் நீதிமன்றில் மேற்கொள்ளப்படும் வழக்கு விசாரணைக்குப் பாதிப்பு ஏற்படலாம் என இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தீர்மானிப்பாராயின், அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் வழக்கு விசாரணையின் இறுதியில் அல்லது ஏற்புடைய புலனாய்வு உத்தியோகத்தர் வழக்கின் சாட்சியாளராக அழைக்கப்பட்டதன் பின்னர் ஆரம்பப் புலனாய்வு அல்லது முறைமைசார் ஒழுக்காற்று விசாரணைக்குப் பங்குபற்றச் செய்தல்.

02. அதற்கமைய, ஆரம்பப் புலனாய்வுகள் அல்லது முறைமைசார் ஒழுக்காற்று விசாரணைகளுக்குக் குறித்த ஆணைக்குழுவின் புலனாய்வு உத்தியோகத்தர்களை சாட்சியாளர்களாக முன்னிலைப்படுத்த கோரும் போது பின்வரும் தகவல்களுடன் ஏற்புடைய கோரிக்கைகளை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்குமாறு தயவுடன் அறியத் தருகிறேன்.

1) ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்படும் உத்தியோகத்தரின் பெயர்
2) அவருக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு தொடர்பிலான வழக்கு இலக்கம் மற்றும் ஏனைய விபரங்கள்
3) சாட்சியாளர்களாக அழைக்க எதிர்பார்க்கும் புலனாய்வு உத்தியோகத்தர்களின் பெயர்கள்
4) குறித்த புலனாய்வு உத்தியோகத்தர்களை சாட்சியாளர்களாக அழைக்கையில் அவர்கள் மூலம் ஏதேனும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயின் குறித்த ஆவணங்கள்

03. அதற்கமைய, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் புலனாய்வு உத்தியோகத்தர்களை சாட்சியாளர்களாக அழைப்பதற்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகளின் போது ஏற்புடைய ஆரம்பப் புலனாய்வு அல்லது முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தினத்திற்கு ஆகக் குறைந்தது 14 நாட்களுக்கு முன்னர் குறித்த கோரிக்கைகளை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அவர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும் எனவும், அவ்வாறு கோரப்படும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் அல்லது குறித்த உத்தியோகத்தர்கள் பங்குபற்றல் தொடர்பில் ஏதேனும் விசாரித்தறிய வேண்டியிருப்பின், பின்வரும் தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம் அல்லது மின்னஞ்சல் ஊடாக தகவல்களை விசாரித்தறியலாம் எனவும் குறித்த ஆணைக்குழுவினால் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி இலக்கம் : 0112-596365
தொலைநகல் இலக்கம் : 0112-595045
மின்னஞ்சல் : ciaboc-dgma@ciaboc.gov.lk

04. அதற்கமைய, எனது சமவிலக்க மற்றும் 2023.05.03 ஆம் திகதிய கடிதத்தை இத்தால் இரத்துச் செய்வதுடன், மேற்குறித்தவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் அறியத் தருகிறேன்.

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன
செயலாளர்
பகிரங்க சேவை ஆணைக்குழு

**பிரதி** : பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, தங்களது DG/RS/165/2025 ஆம் இலக்க மற்றும் 2025.06.12 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைய த.த.